தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

உரிமையாளர் N.S.K.சிவக்குமார் B.Com.,
N.S.K
தங்கமாளிகை
தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு
செய்கூலி, சேதாரம் இல்லை
96557 79285
98429 78833

| Vol: 02 | Issue: 82 | 4 Pages | 21.10.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 82 | 4 பக்கங்கள் | 21.10.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று**

**விளக்கம்:**
பொய்யாமை ஆகிய அறத்தை உண்மையாகவே போற்றி வாழ முடிந்தால் மற்ற அறங்களைச் செய்தலும் நல்லது ஆகும்.

# விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தஞ்சை, அக். 21

தஞ்சாவூர் மாவட்டம், பாப்பா நாடு சாலை விபத்தில் காவல் துறை தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், ரூ.25 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில்,

"தஞ்சாவூர் மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியாற்றிவந்த செந்தில்குமார் (வயது 49) என்பவர் (19.10.2024) பிற்பகல் 3.15 மணியளவில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுவிட்டு திரும்பும் வழியில் இருசக்கர வாகனத்தில் பட்டுக்கோட்டை சென்றபோது, தஞ்சாவூர்பட்டுக்கோட்டை சாலையில் கறம்பியம் அருகில் எதிரில் வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.




சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்." என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கேரள முன்னாள் முதல்மந்திரி அச்சுதானந்தனுக்கு 101 வயது; தலைவர்கள் வாழ்த்து



திருவனந்தபுரம், அக். 21

கேரளாவின் முன்னாள் முதல் மந்திரி மற்றும் கம்யூனிஸ்டு கட்சியின் பழம்பெரும் தலைவர் வி.எஸ். அச்சுதானந்தன் இன்று 101வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். அவருக்கு கேரள கவர்னர் ஆரிப் முகமது கான் மற்றும் முதல்மந்திரி பினராயி விஜயன் உள்ளிட்டோர் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

இதேபோன்று கோவா கவர்னர் பி.எஸ். ஸ்ரீதரன் பிள்ளை, கேரள மந்திரிகளான வி. சிவன் குட்டி, கே.என். பாலகோபால் மற்றும் ஜி.ஆர். அனில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை உருவாக்க குழுவின் முன்னாள் உறுப்பினர் எஸ். ராமசந்திரன் பிள்ளை மற்றும் கேரள இந்திய கம்யூனிஸ்டுவின் செயலாளர் பினோய் விஸ்வம் உள்ளிட்டோர் அச்சுதானந்தனின் வீட்டுக்கு சென்று அவரை நேரில் சந்தித்து தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொண்டனர்.

இந்தியாவில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான அச்சுதானந்தன், வர்த்தக யூனியன் செயல்பாடுகளின் வழியே அரசியலுக்கு வந்தவர். கேரள சட்டசபையின் உறுப்பினராக 7 முறையும் மற்றும் கேரளாவின் 11வது முதல்மந்திரியாகவும் பதவி வகித்த அனுபவம் கொண்டவர்.

3 முறை எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்தவர். கட்சியின் செயலாளராக 3 முறையும், கட்சியின் கொள்கை உருவாக்க குழுவின் உறுப்பினராக நீண்டகாலம் இருந்தவர். முதல்மந்திரி, சட்டசபை உறுப்பினர் அல்லது எதிர்க்கட்சி தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்ததுடன், கம்யூனிச கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றுவதில் ஆர்வம் கொண்டவர்.

அவர் இடுக்கி மாவட்டத்தின் மூணாறு பகுதியில் நில ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்காக இயக்கம் ஒன்றை தொடங்கினார். இதனால், அவர் முதல் மந்திரியாக இருந்தபோது, கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், அவருடைய கட்சியின் தொண்டர்களோ அவருடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தனர்.

## மேல்மலையனூர் அருகே வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வியாசர் தொண்டு நிறுவனம் சார்பில் நலத்திட்ட உதவிகள்

விழுப்புரம், அக். 21

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சிறுதலைப் பூண்டி கிராமத்தில் நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்ததாக 20க்கும் மேற்பட்ட வீடுகளை வருவாய்த்துறை அதிகாரிகள் கடந்த மாதம் இடித்து அகற்றினர். இந்நிலையில் வீடுகள் இருந்த குடும்பத்தினருக்கு வருவாய் துறை சார்பில் வழங்கப்பட்ட மாற்ற இடம் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத இடமாக இருந்ததால் அப்பகுதி மக்கள் வீடுகள் இன்றி தவித்து வந்தனர்.

இதனிடையே சென்னை வியாசர் அறக்கட்டளை சார்பில் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட குடும்பத்தினருக்கு வியாசர் தொண்டு நிறுவன தலைவர் ஜி.பி.சாமி தலைமையில் அரிசி மளிகை பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் மாவட்ட நிர்வாகத்திடம் கூறி அவர்களுக்கு உடனடியாக நல்ல மாற்று இடத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளிக்கப் பட்டது.



நலத்திட்ட உதவிகளை வழங்கிய வியாசர் அறக்கட்டளைக்கு வீடுகளை இழந்து தவிக்கும் பொதுமக்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் வியாசர் அறக்கட்டளை மேலாளர் மாணிக்கம், பொதுச் செயலாளர் சங்கர், பொருளாளர் வெங்கடேசன், அறக்கட்டளை நிதியாளர்கள் ஏ.சி. முருகேசன், சிவகுமார், ராஜாராம், ராமச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பீகாரில் சாமி சிலைகள் உடைப்பு.. கொதித்தெழுந்த பொதுமக்கள்



பாகல்பூர், அக். 21

பீகார் மாநிலம் பாகல்பூர் மாவட்டம் சான்ஹாலா பஜாரில் உள்ள இந்து கோவிலில் சாமி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நேற்று இரவு கோவிலுக்குள் அத்துமீறி நுழைந்த மர்ம நபர்கள் இந்த செயலை செய்துள்ளனர்.

இதுபற்றி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே சாமி சிலைகள் உடைக்கப்பட்டதால் கொதித்தெழுந்த பொதுமக்கள், சான்ஹாலா காவல் நிலையத்திற்கு வெளியே திரண்டு போராட்டம் நடத்தினர். சாலை மறியலும் செய்தனர். டயர்களை எரித்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு பதற்றம் உருவாகாமல் இருக்க போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். போலீசார் கொடி அணிவகுப்பு ஊர்வலமும் நடத்தினர். தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக காவல் துறை தெரிவித்துள்ளது.

## விழுப்புரத்தில் மாபெரும் இரத்ததான முகாம்




விழுப்புரம், அக். 21

விழுப்புரம். ஸ்ரீ மகாலட்சுமி குருப்ஸ் திரு.K.J.ரமேஷ் அவர்களின் நினைவாக கிரின்ஸில் மாபெரும் இரத்ததான முகாம் நடந்தது. இதில் உரிமையாளர்கள், .பிரகாஷ், .வெங்கடேஷ்.. ராஜேஷ். .மதன். .அஸ்வின். வழக்கறிஞர் நாகராஜ்..சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் திரு.இராமகிருஷ்ணன். இந்தியன் ரெட் கிராஸ் நிறுவனப் புரவலர்.திரு.K.A முகமது அக்பர் அலி, ஆனந்தா இனிப்பக உரிமையாளர் திரு.கலைமணி, ரோட்டரி, லையன்ஸ் சங்க நிர்வாகிகள், இந்தியன் ரெட் கிராஸ் நிர்வாகியும், ஜேஆர். சிமாவட்டக்கன்வீனர்முனைவர்.ம.பாபுசெல்வதுரை,ஆகியோர் முன்னிலையில் நடந்தது. அரசு விழுப்புரம் இரத்த வங்கி மருத்துவக் குழுவினர், இரத்தத்தை சேகரித்தனர். இதில் அப்பம்பட்டு சையத் முட்டை மிட்டாய் பணியாளர் A.முகமது உசேன். தொடர்ந்து இரத்ததானம் செய்து வருகிறார். அவரை அனைவரும் பாராட்டினர். முகாமில், சுமார்.170 நபர்கள் இரத்ததானம் செய்தனர்,




தேவகி ஸ்கேன் மற்றும் தி பெடரல் இணைந்து நடத்தும் மதுரை மாரத்தான் 2024 மாரத்தான் போட்டி மதுரை காந்தி மியூசியத்தில் நடைபெற்றது இதில் போட்டியை தேவகி மருத்துவமனை டாக்டர் ஜி நாகேந்திரன் கொடியசைத்துதுவக்கி வைத்தார் விழாவின் முடிவில் பரிசுகளை பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி பரிசுகளை வழங்கினர் உடன் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி எம் எல் ஏ வெங்கடேசன் டாக்டர் தேவகி மற்றும்தமிழ்நாடு ஒலிம்பிக்சங்கதலைவர்சோலைராஜா மற்றும் ஆயிரத்துக்கும்மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்

## சத்தீஷ்கார்: நக்சல் தாக்குதலில் பலியான வீரர்களின் உடல்களை தோளில் சுமந்து சென்ற மந்திரி

ராய்ப்பூர், அக்.21

சத்தீஷ்காரின் நாராயண்பூர் மாவட்டத்தில் இந்தோதிபெத்திய எல்லை காவல் படையினர் மற்றும் நாராயண்பூர் மாவட்ட போலீசார் இணைந்து கூட்டாக நக்சலைட்டுகளை தேடும் பணியில் நேற்று ஈடுபட்டனர். அப்போது, பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த வீரர்களை தாக்கியதுடன், சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றை வெடிக்க செய்து பெரிய அளவில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த தாக்குதலில் இந்தோதிபெத்திய எல்லை காவல் படையை சேர்ந்த 2 வீரர்கள் உயிரிழந்தனர். இதுபற்றி பஸ்தார் பகுதிக்கான ஐ.ஜி. கூறும்போது, பலியானவர்கள் பவார் அமர் ஷாம்ராவ் மற்றும் கே. ராஜேஷ் என தெரிய வந்துள்ளது. இவர்கள் தவிர போலீசாரில் 2 பேர் காயமடைந்தனர். சிகிச்சைக்கு பின்னர் அவர்கள் குணமடைந்து வருகின்றனர் என்றார்.

இந்நிலையில், வீரர்கள் இரண்டு பேரின் உடல்களை மந்திரி டேங் ராம் வெர்மா தோளில் சுமந்தபடி சென்று இறுதி மரியாதை செலுத்தினார். இதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, சத்தீஷ்காரில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, நக்சலைட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. சத்தீஷ்காரில் நக்சலைட்டுகளே இல்லாத நிலையை உருவாக்குவதற்கான பணியை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது என்றார்.

சத்தீஷ்காரின் தன்டேவாடா நாராயண்பூர் எல்லை பகுதியருகே நெந்தூர் மற்றும் துல்துலி கிராமங்களில் வனப்பகுதிகளில் பாதுகாப்பு படையினர் நேற்று நடத்திய என்கவுன்டரில் 38 பேர் உயிரிழந்தனர் என தன்டேவாடா போலீசார் வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.



ஏழை,எளியோர்க்கும்,இயலாதவர்களுக்கும்உதவிசெய்வதையே முதலானகடமைஎன்றுகுறிக்கோளாகவிளங்கும்"மக்கள்தலைவர், எங்கள் வழிகாட்டி, பல்லடம்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பல்லடம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கரைப்புதூர் அ. நடராஜன் நல் நல்வாழ்த்துகளோடு திருப்பூர் அரசு மருத்துவமனையில் அஇஅதிமுக கிளைகழகச் செயலாளர் அய்யம்பாளையம் மு.பாலசுப்ரமணியம் இரத்ததானம் வழங்கி வழங்கினார்




விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் திருவண்ணாமலைக்கு செஞ்சி வழியாக பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.ஆனந்த் தலைமையில் செஞ்சியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது உடன் துணை அமைப்பாளர் அண்ணாமலை, ஒன்றிய கவுன்சிலர் தேவதானம்பேட்டை சீனிவாசன்,இளைஞர் அணி பெருங்காப்பூர் பிரபு மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பாளித்தனர்

# மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் பைப்ளேன் கேத் லேப் குறித்து அக்டோபர் 18 முதல் 20 வரை இந்த கான்கிளேவ் நடத்தப்படுகிறது

மதுரை, அக்.21

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற மருத்துவமனைகளுள் ஒன்றான மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, மீனாட்சி நியூரோஎண்டோவாஸ்குலர் இன்டர்வென்ஷன் கான்கிளேவ் 2024 ( 2024) என்ற நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்துகிறது. இரத்தநாள அழற்சி, தமனி குறைபாடு மற்றும் பக்கவாதம் போன்ற மூளை மற்றும் முதுகுத்தண்டை பாதிக்கிற இரத்தநாள பாதிப்புகளுக்கான சிகிச்சையில் மேம்பட்ட உத்திகள் மீது அறிவையும், திறன்களையும் இளம் நரம்பியல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும், நரம்பியல் அறுவைசிகிச்சையில் முதுநிலை பட்டதாரிகளுக்கும் வழங்குவதே 3 நாட்கள் நிகழ்வாக நடைபெறுகிற இதன் நோக்கமாகும்.

தென்தமிழ்நாட்டில் முதலாவது கேத் லேப் என புகழ்பெற்றிருக்கும் இம்மருத்துவமனையின் பைப்ளேன் கேத் லேப் குறித்து அக்டோபர் 18 முதல் 20 வரை இந்த கான்கிளேவ் நடத்தப்படுகிறது. நரம்புக்குழாய் பாதிப்புகளைக் கண்டறியவும் சிகிச்சையளிக்கவும் இந்த கேத் லேப் பயன்படுத்தப்படுகிறது. இந்த கான்க்ளேவில் மருத்துவ நிபுணர்களின் சிறப்புரைகள், நேரடி அறுவைசிகிச்சைகள் மற்றும் பயிற்சி ஆகியவை இடம்பெறும். நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவர்கள் மட்டுமன்றி மூளை



நரம்பியல் மருத்துவர்கள் மற்றும் கதிர்வீச்சியல் மருத்துவர்களுக்கும் இந்நிகழ்வு பயனுள்ளதாக இருக்கும்.

கான்கிளேவ் 2024 நிகழ்வின் அமைப்பு குழுவில் மருத்துவ இயக்குநர் டாக்டர். ரமேஷ் அர்த்தநாரி மற்றும் மருத்துவமனையை சேர்ந்த திரு.திலீப் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இண்டெர்வென்ஷனல் நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர். கௌதம் குஞ்சா இது தொடர்பாக பேசுகையில், மேம்பட்ட நரம்பியல் அறுவைசிகிச்சைகள் மற்றும் இண்டெர்வென்ஷனல் சிகிச்சைகளை மேற்கொள்வதில் அதிக திறந்த வாய்ந்த நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணர்கள் மற்றும் திறன்மிக்க நரம்பியல் மருத்துவர்கள் மற்றும் கதிர்வீச்சியல் நிபுணர்கள் அடங்கிய அர்ப்பணிப்புமிக்க குழுவை கொண்டிருப்பதில் இம்மருத்துவமனை பெருமை கொள்கிறது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், சமீபத்தில், ஒரு ஒற்றை அமர்வில் ஒரு நோயாளிக்கு 3 மூளை அழற்சிகளுக்காக குறிப்பிட்ட இரத்தநாளத்திற்கு இரத்த ஓட்டத்தை தடுக்கும் சிகிச்சையினை நாங்கள் வெற்றிகரமாக மேற்கொண்டோம். நரம்பியல் சார்ந்த இரத்தக் குழாய் இண்டெர்வென்ஷனல் சிகிச்சையில் ஒரு அரிதான சாதனையாக இது கருதப்படுகிறது. மற்றுமொரு குறிப்பிடத்தக்க நேர்வில் ஒரு நோயாளிக்கு அறுவைசிகிச்சையையும் மற்றும் காய்லிங் செயல்முறையையும் எமது குழு வெற்றிகரமாக மேற்கொண்டது. மூளை நரம்பியல் சார்ந்த இண்டெர்வென்ஷனல் செயல்முறைகளுக்கும், ரோபோ உதவியுடன் செய்யப்படும் நரம்பியல் அறுவைசிகிச்சை செயல்முறைகளுக்கு இம்மாநிலத்தில் உயர் சிகிச்சை மையமாக எமது மருத்துவமனையை நிலைநாட்டுவதே எமது நோக்கமாகும். எமது நோயாளிகளுக்கு மிக உயர்ந்த தரத்தில் சிகிச்சையையும் அதன் பலன்களையும் வழங்குவது எமது இலக்காகும் என்று குறிப்பிட்டார்.

இந்த பகுதியில் நரம்பியல் சார்ந்த இரத்தநாள சிகிச்சையை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்ற நடவடிக்கையாக இந்த கான்கிளேவ் இருக்கிறது என்று நரம்பியல் அறுவைசிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். செந்தில்குமார் கூறினார். பங்கேற்பாளர்களுக்கு சிறப்புரை வழங்க 10 நிபுணர்களை நாங்கள் அழைத்திருக்கிறோம். சவால்மிக்க நேரடி சிகிச்சை மீதான செய்முறை விளக்கங்களின் வழியாக அவர்களுக்கு விளக்கமளிக்கப்படும். இரத்தநாள அழற்சிக்கான சிகிச்சையில் காய்லிங் என்பது மிகக் குறைந்த ஊடுருவலுள்ள ஒரு மருத்துவ செயல்முறையாகும். இதிலும் மற்றும் ஸ்டெண்ட் பொருத்துவதிலும், இரத்தநாளங்களிலிருந்து இரத்த உறைகட்டிகளை அகற்றுவதில் பயன்படுத்தப்படும் ஒரு செயல்முறையான மெக்காணிக்கல் த்ராம்பெக்டமி என்பவை மீதும் நேரடி செய்முறை விளக்கங்கள் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படும். இத்துறை நிபுணர்களோடு சவால்மிக்க சிகிச்சை நேர்வுகள் குறித்து விவாதிக்கவும் மற்றும் புதிதாக பயன்படுத்தப்படுகிற மூளை நரம்பியல் இண்டெர்வென்ஷனல் சிகிச்சைகள் மீது சிறந்த தகவல்களை பெறவும் பங்கேற்பாளர்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்று அவர் விளக்கமளித்தார்.

# நியாய விலைக்கடைகளில் உரிய காலத்தில் முத்திரையிடப்படாத தராசு இனங்கள் பறிமுதல்

தேனி, அக். 21

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் தேவாரம் பேரூராட்சி அலுவலகம், நியாயவிலைக்கடை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், பேருந்து நிலையம், திரையரங்கம், காவல் நிலையம், மற்றும் இதர பணிகளின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, நடப்போம் நலம்பெறுவோம் திட்டத்தின் கீழ் தேவாரம் பேரூராட்சி பகுதியில், 8 கி.மீ. தூரம் 96 ஆவது நடைப்பயண பேரணி மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது. இப்பேரணியில், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவின் பெயரில், தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் மூலம் உத்தமபாளையம் வட்டத்தில் அனுமந்தன்பட்டி மற்றும் புதுப்பட்டி கடை எண்.2,4 நியாயவிலைக்கடைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் உரிய காலத்தில் முத்திரையிடப்படாத தராசு இனங்கள் பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது. கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947, சட்ட முறை எடை அளவு சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம் 1958 ஆகிய சட்டங்களின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நியாயவிலைக்கடைகளில் முத்திரையிடப்படாத தராசு இனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கம்பம் பேருந்து நிலையம் தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்றும், பேருந்து நிலையத்தில் பராமரிக்கப்படும் கழிவறை ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, கம்பம் பணிமனையிலிருந்து செல்லும் பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்கு இயக்கப்படுகிறதா என்றும், பணியாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு பணிக்கு வந்துள்ளனரா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

# பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் கடந்த 3 ஆண்டுகளின் வளர்ச்சித்திட்டப்பணிகள்: மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

சேலம், அக். 21

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி, செய்தியாளர் பயணத்தின்போது நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,



ஊராட்சி பொது வளர்ச்சி நிதி, மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 15வது ஒன்றிய நிதிக் குழு, கலைஞர் கனவு இல்லம், நபார்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ரூ.101.43 கோடி மதிப்பீட்டிலான 2,867 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2,031 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 836 பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், நிலவாரப்பட்டி ஊராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிறுத்துமிடத்திற்கு பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய குளம் அமைக்கப்பட்டுவரும் பணிகளும் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், நிலவாரப்பட்டி ஊராட்சியில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் அய்யனாரப்பன் கோவில் அருகில் மினி சமுதாய கழிப்பறை வளாகம் கட்டப்பட்டுள்ளதையும், பள்ளிதெருப்பட்டி ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிதெருப்பட்டி முதல் மல்லூர் சாலை வரை ரூ.47.16 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் சாலைப் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணிகளை விரைவாகவும் உரிய தரத்திலும் முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிதெருப்பட்டி மற்றும் வேடிகாரன்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளுக்கு தலா ரூ.28.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலத்திற்கு முன்புறம் நடைபாதைக் கற்கள் பதிக்கும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று, பனமரத்துப்பட்டி பேரூராட்சியில் சாலை அமைக்கும் பணிகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட 3 பணிகள் ரூ. 1.73 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# கைம்பெண் கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்களுக்கான ஒரு நாள் விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்காசி, அக். 21

தென்காசி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் கைம்பெண் கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்களுக்கு நிதியினை முறையாக கையாளுதல், சொத்துரிமை, இலவச சட்ட உதவி குறித்த தகவல்கள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த விழிப்புணர்வு , குடும்ப வன்முறைகளிலிருந்து உரிய பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள் குறித்த ஒரு நாள் கருத்தரங்கு கோல்டன் ஹாலில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன்திருமலைக்குமார் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.



பின்னர் மாவட்ட கலெக்டர்தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை களைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வசதிகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சிறப்பு சுய உதவிக்குழுக்கள் அமைப்பது, தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற தேவையான திட்டங்களை வகுத்து, சமூகத்தில் அவர்கள் பாதுகாப்புடன் கண்ணியமான முறையில் வாழ்வதற்காக கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பயன்படுத்திட என்ற இணைப்பினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். இக்கருத்தரங்கின் மூலம் கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நலவாரியம் குறித்த செயல்பாடுகளும் மற்றும் அரசின் மூலம் கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம் பெண்கள் ஆகியோருக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த தெளிவு கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களிடையே ஏற்பட்டு அவர்கள் மூலம் பொதுமக்களை சென்றடையும் என்ற நோக்கில் இக்கருத்தரங்கு நடைபெற்று வருகிறது என மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

# ஆண்டிபட்டி ஒன்றியம் டி.ராஜகோபாலன்பட்டி ஊராட்சியில் நீர்வரத்து ஓடைகள் தூர்வாரும் பணிகள்

ஆண்டிபட்டி, அக். 21

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள டி.ராஜகோபாலன்பட்டி ஊராட்சி நிர்வாகம் சார்பில் நீர்வரத்து ஓடைகள் தூர்வாரப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வரும் பணியை ஊராட்சி தலைவர் மற்றும் மாவட்ட கவுன்சிலர் பார்வையிட்டார்கள்.

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு துறைகளில் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஆண்டிபட்டி ஒன்றியம் டி.ராஜகோபாலன்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட வேளமத்து ஊரணியில் ராஜகோபாலன்பட்டி கண்மாய் மற்றும் உச்சிலுத்து கண்மாய்களுக்கு செல்லும் நீர்வரத்து ஓடைகள் புதர்மண்டி காட்சியளிப்புதாகவும், மேலும் இந்த நீர்வரத்து ஓடை தேனிமதுரை நெடுஞ்சாலை ஓரத்தில் உள்ளதால் ஆக்கிரமிப்புகள் நிறைந்து காணப்படுவதாகவும் இதனை அகற்ற வேண்டும் என பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர். இந்த கோரிக்கையின் அடிப்படையில் டி.ராஜகோபாலன்பட்டி ஊராட்சி நிர்வாகத்தினர் நீர்வரத்து



ஓடைகளை தூர்வாரும் பணியிலும், ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். வேளமத்து ஊரணி பகுதி, கணவாய் பகுதியில் பெய்து வரும் மழை இந்த நீர்வரத்து ஓடைகளின் வழியாக கண்மாய்களை சென்றடையும். இதனால் ஏராளமான ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். கிராம பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் உயரும். இந்த நீர்வரத்து ஓடைகளை தூர்வாரும் பணியை ஊராட்சி மன்ற தலைவர் வேல்மணி பாண்டியன், மாவட்ட கவுன்சிலர் ஜி.கே. பாண்டியன் ஆகியோர் பார்வையிட்டனர். பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நீர்வரத்து ஓடைகள் தூர்வாரப்பட்டதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ராஜபாளையத்தில் தீபாவளி பண்டிகை சலுகையாக ஜவுளிக்கடையில் ஒரு ரூபாய்க்கு பெட்ஷீட் வழங்கியதால் முண்டியடித்து அலைமோதிய பொதுமக்கள் கூட்டம்

ராஜபாளையம், அக். 21

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பொன்விழா மைதானத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சலுகை விலையில் விற்பனை செய்யப்படும் ஆடையகம் திறப்பு விழா நடந்தது. கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம், தொடுபுழாவை தலைமையகமாக கொண்டு ஆடைகள் விற்பனை செய்து வரும் நிறுவனத்தினர், ராஜபாளையத்தில் சலுகை விலையில் ஆடைகளை விற்பனை செய்யும் பிரம்மாண்டமான நிலையத்தை



அமைத்துள்ளனர். ஆரம்ப விலையான குறைந்தபட்சமாக 19 ரூபாயிலிருந்து, கூடுதல் தொகையாக ரூபாய்499 வரை ஆண்கள், பெண்கள் சிறுவர், சிறுமியர் என, குழந்தைகள் முதல் முதியவர் வரை அனைத்து தரப்பினருக்கான எல்லா வகையான ஆடைகளும் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. திறப்பு விழா சலுகையாக இன்று முதல் 18.19.20 தேதி வரை, 3 நாட்களுக்கு, கடையில் கொள்முதல் செய்து, பில் வாங்கி பணம் செலுத்துகின்ற முதல் 165 வாடிக்கையாளர்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு பெட்ஷீட் வழங்கப்படுமென விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததால், ஆடைகளை வாங்குவதற்காக வாடிக்கையாளர்கள் கூட்டம் ஆடைகள் விற்பனை நிலையம் திறக்கப்பட்டவுடன் கடையினுள் முண்டியடித்துச் சென்ற ஆண் பெண் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான பிரத்யோக உடைகளை வாங்கி அள்ளிச்சென்று, ஒரு ரூபாய் பெட்ஷீட்டையும் மகிழ்ச்சியுடன் பெற்றனர்.

# விளவங்கோடு வட்டத்திற்குட்பட்ட பகுதிகள் கலெக்டர் நேரில் ஆய்வு

கன்னியாகுமரி, அக். 21

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்திற்குட்பட்ட குழித்துறை, மார்த்தாண்டம் உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இக்குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வாயிலாக சுமார் 4520 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 24,000 பேர் பயன் பெறுவார்கள். எனவே குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை முழு சுகாதாரத் தன்மையுடனும், நோய்த் தடுப்பு மருந்து தெளித்து வழங்கிட ஆணையர் மற்றும் செயற்பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.



அதனைத்தொடர்ந்து மார்த்தாண்டம் திருவட்டார் சாலையின் அருகாமையில் அமைந்துள்ள உரக்கிடங்கினை ஆய்வு மேற்கொண்டு, மக்கும் குப்பை மற்றும் மட்கா குப்பைகள் என தரம் பிரித்து உரம் தயாரித்து, உற்பத்தி செய்திட பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.14.6 கோடி மதிப்பில் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நவீன காய்கறி சந்தை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பணிகளை தரமானதாகவும் விரைந்து முடித்திட ஆணையர், செயற்பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு மார்த்தாண்டம் மேம்பாலத்தில் திடீர் பழுது ஏற்பட்டதை தொடர்ந்து அப்பழுதினை உடனடியாக போர்க்கால அடிப்படையில் சீரமைத்திட தேசிய நெடுஞ்சாலைதுறை, மாநில நெடுஞ்சாலை துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் பழுதடைந்த சாலையை சீரமைத்து கனரக வாகனங்கள் தவிர பேருந்துகள், நான்கு சக்கர வாகனங்கள், இருசக்கர வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, குழித்துறை நகராட்சி ஆணையர் ராஜேஸ்வரன், விளவங்கோடு வட்டாட்சியர் ஜூலியன் ஹீவர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தமிழ்த்தாய் வாழ்த்து விவகாரத்தில் கவர்னரை வசைபாடக் கூடாது: ஓ.பி.எஸ்.

சென்னை, அக். 21

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

தமிழ்நாடு கவர்னர் கலந்துகொண்ட சென்னை தூர்தர்ஷன் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில், "தமிழ்த் தாய் வாழ்ந்து" பாடும்போது, தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்" என்ற வரி விடுபட்டது என்பது மிகப் பெரிய தவறு. இதில் யாருக்கும் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

இது கவனக் குறைவு காரணமாக ஏற்பட்ட தவறு என்று சென்னை தூர்தர்ஷன் விளக்கம் அளித்திருக்கிறது. எனவே, இது தூர்தர்ஷன் நிர்வாகம் செய்த தவறு. இதனை, கவர்னர்தான் செய்தார் என்று கற்பனை செய்து கொண்டு, அவரை வசைபாடுவது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இந்தக் குற்றச்சாட்டினை மேற்கு கவர்னரே மறுத்துள்ளார்.

இந்தத் தருணத்தில், எம்.ஜி.ஆர். நடித்த 'பெற்றால்தான் பிள்ளையா' என்ற படத்தில் வரும் "தவறு என்பது தவறிச் செய்வது. தப்பு என்பது தெரிந்து செய்வது. தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும், தப்பு செய்தவன் வருந்தி ஆகணும்" பாடல் வரிகளை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கேற்ப, செய்த தவறினை தூர்தர்ஷன் நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதற்குப் பிறகும், கவர்னரை வசைபாடுவது என்பது அரசியல் விளம்பரத்திற்காக தரம் தாழ்ந்த விமர்சனங்கள் மேற்கொள்ளப்படுகிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்துவிடும்.

தூர்தர்ஷன்நிர்வாகத்தில் ஏற்பட்ட கவனச் சிதறல் என்று தூர்தர்ஷன் நிர்வாகமே ஒப்புக் கொண்டிருப்பதையும், கவர்னர் தன் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டினை மறுத்திருப்பதையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வால்பாறை: சிறுமியை கொன்ற சிறுத்தையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரம்



வால்பாறை, அக். 21

ஜார்க்கண்ட் மாநிலத்தை சேர்ந்தவர் ஹினில் அன்சாரி. இவருடைய மனைவி நசீரான் கதூம். இவர்கள் கோவை மாவட்டம் வால்பாறை அருகே உள்ள ஊசிமலை மட்டம் எஸ்டேட் பகுதியில் தங்கியிருந்து, அங்குள்ள தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்களாக வேலை பார்த்து வருகின்றனர். இந்த தம்பதிக்கு அப்சார் கதூம்(வயது 4) என்ற மகள் உண்டு.

நேற்று எஸ்டேட் பகுதியை சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டதால், தேயிலை தோட்டத்தில் பணி இல்லை. இதனால் நசீரான் கதூம் தனது மகள் அப்சார் கதூமை அழைத்துக்கொண்டு, அங்குள்ள 14ம் நம்பர் தேயிலை தோட்டத்துக்கு அருகில் உள்ள நிலத்தில் கீரை பறித்துக்கொண்டு இருந்தார். அப்போது அங்கு பதுங்கி இருந்த சிறுத்தை ஒன்று திடீரென சிறுமி அப்சார் கதூம் மீது பாய்ந்து தாக்கியது. தொடர்ந்து அவளை கவ்விக்கொண்டு அங்குள்ள தேயிலை தோட்டத்துக்குள் இழுத்து சென்றது.

இதை கண்டு அதிர்ச்சி அடைந்த நசீரான் கதூம் கூச்சலிட்டபடி சிறுத்தையை துரத்திக்கொண்டு ஓடினார். அவரது சத்தம் கேட்டு அங்கு சக தொழிலாளர்கள் ஓடி வந்தனர். இதற்கிடையில் சிறுமியை தேயிலை தோட்டத்தில் போட்டுவிட்டு வனப்பகுதியை நோக்கி சிறுத்தை தப்பி ஓடியது. பின்னர் அங்கு வந்த நசீரான் கதூம் மற்றும் தொழிலாளர்கள் சிறுமியை மீட்டனர். ஆனால் சிறுத்தை தாக்கியதில் சிறுமி உயிரிழந்து இருந்தாள். இதை அறிந்து அவளது தாய் நசீரான் கதூம் கதறி அழுதார்.

இதுகுறித்து தகவல் அறிந்த வால்பாறை வனத்துறையினர் மற்றும் போலீசார் விரைந்து வந்து, சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் சிறுமியை கொன்ற சிறுத்தையை பிடிக்கும் பணியில் வனத்துறையினர் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். 6 இடங்களில்கண்காணிப்பு கேமரா பொருத்தி சிறுத்தை நடமாட்டத்தை வனத்துறை கண்காணித்து வருகின்றனர். மேலும் தேயிலை தோட்டத்தில் உள்ள புதர்களை அகற்றவும் வனத்துறை அறிவுறுத்தி உள்ளனர்.

இதனிடையே உயிரிழந்த சிறுமியின் உடலுக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. இதனையடுத்து சிறுமியை கொன்ற சிறுத்தையை கூண்டு வைத்து பிடிக்க தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து அதற்கான நடவடிக்கையை எடுத்து வருவதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரிடம் முதற்கட்ட நிவாரண தொகையாக வனத்துறை சார்பில் ரூ. 50 ஆயிரம் வழங்கப்பட்டது. வால்பாறையில் பட்டப்பகலில் சிறுமியை சிறுத்தை கடித்துக்கொன்ற சம்பவம் தொழிலாளர்களிடையே அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# 25 ஆண்டுகள் பழமையான தொகுப்பு வீடு இடிந்து விழுந்து பெண் பலி



தேனி , அக். 21

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா முத்தாலம் பாறை ஊராட்சிக்குட்பட்ட தொப்பையாபுரம் கிராமத்தை சேர்ந்தவர்சின்னப்பொண்ணு 55 வயதான இவருக்கு கடந்த 1996ம் ஆண்டு இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. கட்டிக்கொடுத்து 10 ஆண்டுகள் மட்டுமே நல்ல நிலையில் இருந்த வீடுகள், அதன் பின்னர் உறுதித்தன்மையை இழக்கத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையில் மேற்கூரை இடிந்து விழுவதும், பக்கவாட்டு சுவர்கள் பெயர்ந்து விழுவதும், மழை பெய்யும் போதெல்லாம் மேற்கூரையில் உள்ளகான்கிரீட்சிமெண்ட் பெயர்ந்து விழுவது என குடியிருப்பவர்கள் அல்லல்பட்டுவந்த நிலையில் ஆண்டுகள் செல்ல செல்ல, வீட்டின் நிலை மோசமாகி அபாயகரமான நிலையை எட்டியுள்ள சூழலில், இரவு நேரத்தில் வீட்டின் மேற்கூரை திடீரென இடிந்து விழுந்ததில், சின்னபொண்ணு என்ற 55 வயதான பெண் இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்நிலையில் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த நிலையில், விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் வருவாய்த் துறை மற்றும் ஒன்றிய அதிகாரிகள் நேரில் வந்து இடிந்த வீட்டை பார்வையிட்டனர்.

இதுகுறித்து வார்டு மெம்பரான நாகர் கூறுகையில், 10 வருடத்திற்கு மேலான கோரிக்கை ஏற்கபடாமல் இருந்த சூழலில் தற்போது உயிரே போய் விட்டது என வேதனை தெரிவிக்கிறார்..

மழை காலம் நெருங்கியுள்ளதால் தார்பாய்களை கொண்டு மேற்கூரையை மூடி ஆபத்தான முறையில் உயிரை பாதுகாத்து வரும் மக்கள், ஒவ்வொரு நொடியையும் பீதியிலேயே நகர்த்தி வருகின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு வீடுகளை புதுப்பித்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர் .

இந்த திட்டத்தில் இதே போல 30 வீடுகள் கட்டி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பள்ளி மாணவர்களை குறிவைத்து போதைப்பொருள் விற்பனை ஈரோடு எஸ்.பி. எச்சரிக்கை




ஈரோடு, அக்.21


ஊசி மூலம் போதை மருந்தை உடலில் செலுத்திக் கொள்பவர்களுக்கு பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக ஈரோடு மாவட்ட எஸ்.பி. ஜவஹர் எச்சரித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது;

"பள்ளி மாணவர்களை குறிவைத்து போதை தரக்கூடிய புகையிலைப் பொருட்களை விற்பனை செய்கிறார்கள். அவை நல்ல வாசனையுடன், இனிப்பான சுவையுடன் இருக்கும். இது மாணவர்களை போதைப் பழக்கத்திற்கு அடிமையாக்கி விடுகிறது.

ஈரோட்டில் இதுவரை 11 ஆயிரத்து 271 வலி நிவாரண மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஊசி மூலம் போதை மருந்தை உடலில் செலுத்திக் கொள்பவர்களுக்கு ரத்தம் மூலமாக பரவக்கூடிய ஹெபாடிடிஸ், எச்.ஐ.வி. உள்ளிட்ட நோய்கள் பரவுவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தீபாவளி பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் அனுமதி: கட்டுப்பாடுகள் என்னென்ன..?



சென்னை, அக். 21

தீபாவளி பண்டிகை அன்று இரண்டு மணி நேரம் பட்டாசு வெடிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கி உள்ளது. தீபாவளி என்றாலே புத்தாடை, இனிப்பு பலகாரங்கள், புதுபடங்களின் ரிலீஸ் என எல்லாம் இருந்தாலும், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை நம் அனைவரது நினைவுக்கும் வருவது பட்டாசுகள் தான். தீபாவளிக்கு முதல் நாள் இரவில் இருந்தேபட்டாசுவெடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அதற்கு ஏற்றார் போல் ஆண்டுதோறும் விதவிதமான பட்டாசுகள் விற்பனைக்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்தசூழலில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாள் முழுவதும் வெடிக்கப்படும் பட்டாசுகளால் சுற்றுச்சூழல் மாசு பெரும் அளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் பட்டாசு வெடிப்பதற்கு என சுப்ரீம்கோ ர்ட்டு சில கட்டுப்பாடுகள் விதித்தது. அதன்படி, மாநில அரசுகளும் தங்களது மாநிலங்களில் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு பட்டாசு வெடிக்க நேரக்கட்டுபாடு விதித்து வருகிறது.

இந்த நிலையில், தீபாவளி பண்டிகை வருகிற 31ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. வழக்கமாக இந்த ஆண்டும் தமிழ்நாடு அரசு நேரக்கட்டுப்பாட்டை அறிவிக்குமா? அல்லது தளர்வுகள் ஏதாவது இருக்குமா? என மக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். இந்நிலையில், தீபாவளிபண்டிகைஅன்று இரண்டு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி வழங்கி உள்ளது. கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் தீபாவளி நாளில் காலை 6 மணி முதல் காலை 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் இரவு 8 மணி வரை மட்டுமே பட்டாசுகள் வெடிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடுகள் என்னென்ன..? 1. பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமை பட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும். 2. மாவட்ட நிர்வாகம் / உள்ளாட்சி அமைப்புகளின் முன் அனுமதியுடன், பொதுமக்கள் திறந்த வெளியில் ஒன்று கூடி கூட்டாக பட்டாசுகளை வெடிப்பதற்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நலச்சங்கங்கள் மூலம் முயற்சிக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை

1. அதிக ஒலி எழுப்பும் மற்றும் தொடர்ச்சியாக வெடிக்க கூடிய சரவெடிகளை தவிர்க்க வேண்டும்.

2. மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அமைதி காக்கப்படும் இடங்களில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும். 3. குடிசை பகுதிகள் மற்றும் எளிதில் தீப் பற்றக் கூடிய இடங்களுக்கு அருகில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும்.

# 80 புதிய பி.எஸ் 6 சாதாரண பஸ்கள் இயக்கம் ; அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, அக்.21

சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் இன்று முதல் 80 புதிய BSVI சாதாரண பஸ்கள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த பஸ்கள் 'விடியல் பயணத் திட்டத்தின்கீழ்'இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 202223 மற்றும் 202324 ஆம் வருடத்திற்கான அறிவிப்பின்படி 2,000 புதிய பஸ்களில் இதுவரை 1,905 புதிய பஸ்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அதேபோல் அடிச்சட்டம் நல்ல நிலையில் உள்ள 1,500 பஸ்களில் கூண்டு முழுவதும் புதுப்பிக்க ஆணை வழங்கப்பட்டு, அதில் 1,262 பஸ்கள் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

மேலும், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KFW) நிதி உதவியுடன் ஏற்கனவே மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் பயன் பெறும் வகையில் இயக்கப்பட்டு வரும் 228 தாழ்தள பஸ்களுடன், கூடுதலாக 41 புதிய தாழ்தள பஸ்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

2024, 25 ஆம் வருடத்திற்கான அறிவிப்பின்படி 3,000 புதிய பஸ்களை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் ஏற்கனவே மற்ற போக்குவரத்து கழகங்களில் 162 பஸ்துகள் இயக்கப்பட்டுள்ள நிலையில், இன்று முதல் மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் 80 புதிய சாதாரண BSVI பஸ்களையும் சேர்த்து 242 புதிய பஸ்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட BSVI சாதாரண பஸ்கள் "விடியல் பயணத் திட்டத்தில்" இயக்கப்படுவதால் மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் உள்ளிட்டோர்கள் பயன் பெறுவார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவகங்கையில் நகைகளை வைத்து மோசடி; வங்கி மேலாளர் கைது

சிவகங்கை, அக். 21

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கல்லல் பகுதியில் செயல்படும் தனியார் வங்கியில், மண்டல மேலாளர் கிருஷ்ணகுமார் தலைமையிலான குழுவினர் வருடாந்திர ஆய்வு மேற்கொ ண்டனர். அப்போது, கடந்த மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை ஆய்வு செய்தபோது அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இதையடுத்து அந்த நகைகளை பரிசோதனை செய்தபோது, வாடிக்கையாளர்கள் அடமானம் வைத்த தங்க நகைகளுக்கு பதிலாக, அந்த நகைகளைப் போலவே உள்ள கவரிங் நகைகள் வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து நடத்தப்பட்ட விசாரணையில், வங்கி மேலாளர் உள்ளிட்ட பணியாளர்கள் இந்த மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. மொத்தமாக வாடிக்கையாளர்கள் அடமானம் வைத்த 533 சவரன் தங்க நகைகள் மோசடி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 2 கோடியே 3 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் என்று கூறப்படுகிறது. இது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்ட போலீசாரிடம் மண்டல மேலாளர் கிருஷ்ணகுமார் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்திய போலீசார், கல்லல் வங்கி மேலாளர் விக்னேஷ், உதவி மேலாளர் ராஜாத்தி, மோசடிக்கு உதவி செய்த ரமேஷ், சதீஷ் ஆகிய 4 பேரை கைது செய்துள்ளனர்.

# கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை தமிழக அரசு ரூ.247 கோடி ஒதுக்கீடு



சென்னை, அக். 21

2023-2024 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ. 247.00 கோடி வழங்கி தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரித்து நலிவடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு அறிவிக்கும் கரும்புவிலைக்குமேல் ஊக்கத்தொகை அறிவித்து வருகிறது.

அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பு அதிகரிப்பதுடன் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2024 25 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2023 24 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.215 சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஒன்றிய அரசு 2023-24 ஆம் அரவைப்பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ. 2919.75/யைக் காட்டிலும் கூடுதலாக மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ.215 வழங்கிடும் வகையில், ரூ.247.00 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து அரசு வழங்கி ஆணையிட்டுள்ளது. அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 12 கூட்டுறவு மற்றும் 16 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 202324 அரவைப்பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2919.75 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.215 யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3134.75/ விவசாயிகள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 202324 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு, சர்க்கரைத்துறை இயக்குநரகத்தால் கூர்ந்தாய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களின் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.247.00 கோடி மதிப்பில் மாநில அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத்தொகையினால் சுமார் 1.20 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சாலை விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் துணை முதல்அமைச்சர்



கள்ளக்குறிச்சி, அக். 21

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் பணி முன்னேற்றம் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நேற்று மாலை கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இதற்கு துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் துறை வாரியாக அரசின் திட்டங்கள் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் விரிவாக கேட்டறிந்து ஆய்வு செய்தார். அப்போது அரசின் திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி செல்லும் வகையில் அதிகாரிகள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார். மாவட்டத்தில் சாலை விபத்துகளை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# சென்னை: மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளான கார்

சென்னை, அக். 21

சென்னை திருவான்மியூரில்இருந்து நேற்று இரவு கோவளம் நோக்கி கார் சென்று கொண்டிருந்தது. அந்த காரில் 4 பேர் பயணித்தனர்.

ஈஞ்சம்பாக்கம் அருகே சென்று கொண்டிருந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோர மின்கம்பத்தில் மோதி தலைக்குப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் இருந்த 4 பேரும் காயமின்றி உயிர்தப்பினர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட கே.சி.சி நகர் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள்: மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கிருஷ்ணகிரி, அக். 21

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சிக் குட்பட்ட கே.சி.சி நகர் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள், இராயக்கோட்டை சாலையில் புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை கட்டுமான பணிகள், ஓசூர் மாநகராட்சி பேருந்து நிலையம் அருகில் புதிய தாக கட்டப்பட்டு வரும் வணிக வளாக கட்டுமான பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர், ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட கே.சி.சி நகர் பகுதியில், தர்கா ஏரியிலிருந்து சின்னாருக்கு செல்லும் உபரிநீர் கால்வாய் ஜேசிபி இயந்திரம் மூலம் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, மழைநீர் குடியிருப்பு பகுதிகளுக்கு புகாதவாறு மாநகராட்சி பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள செடிகொடிகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் தேங்கி கிடப்பதை விரைவாகவும், தூய்மையாகவும் முடிக்க வேண்டும் என மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கே.சி.சி நகர் பகுதியில் சுகாதாரத்துறை சார்பாக, வு ர்சு (தமிழ்நாடு மக்கள் தொகை சுகாதார பதிவேடு) யி செயலி எதற்காக உருவாக்கப்பட்டது, எவ்வாறு செயல்படுகிறது, இந்த செயலி மூலம் என்னென்ன தகவல்கள் மக்களிடமிருந்து பெறப்படுகின்றன, தகவல்கள் பெறுவதற்கு சுகாதார துறை மூலம் யார் யார் செயல்படுகின்றனர், ஒரு தகவல் பெறுவதற்கு எவ்வளவு மணி நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது, இதன் பயன்பாடு என்னென்ன, இதன் மூலம் மக்கள் எவ்வாறு பயன் பெறுவார்கள், இந்த மாவட்டத்தில் எத்தனை சதவீதம் வேலை முடிவு பெற்றுள்ளது போன்ற தகவல்களை பெறலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 70மூ வேலை, முடிவுற்றுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து வார்டுகளிலும் மழைநீர் தேங்காதவாறு கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்க வேண்டும். மழைநீர் குடியிருப்பு பகுதிகளில் தேங்கும்போது

மழைவெள்ளத்தில் பாதிக்கப்படும் நபர்களை பத்திரமாக மீட்டு தற்காலிக பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் தெரிவித்தார்.

# அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நவீன தானியங்கி சலவை இயந்திரம் வழங்கல்



அரியலூர், அக். 21

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.10.65 லட்சம் மதிப்புள்ள நவீன தானியங்கி சலவை இயந்திரம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சட்டப்பேரவை உறுப்பினர் கு.சின்னப்பா, தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.10.65 லட்சம் மதிப்பிலான நவீன தானியங்கி சலவை இயந்திரத்தை வழங்கி, அதனை இயக்கி வைத்து, இதனை முறையாக பயன்படுத்தி கொண்டு தூய்மையை பேணிக்காக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதன்மையர் முத்துகிருஷ்ணன், மருத்துவமனை கண்காணிப்பாளர் ரமேஷ், நகர் மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ஆய்வு

மதுரை, அக். 21

மதுரை மாவட்டம் எழுமலை பேரூராட்சியில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மணிகண்டன் நேரடி ஆய்வு செய்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து பணிகளையும் பார்வையிட்டு பாதுகாப்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருப்பதை



பார்வையிடப்பட்டு மழைநீர் தேங்கும் இடங்களை உடனடியாக கண்டறிந்து மழையினால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வண்ணம் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

2024 – 25 ஆம் ஆண்டு வரி மற்றும் வரியில்லா இனங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணங்களை அந்தந்த காலக்கெடுவிற்குள் வசூல் செய்து பூஜ்ய அறிக்கை சமர்ப்பிக்க அறிவுரை வழங்கினார்.

மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வளம் மீட்பு பூங்காவில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்யப்பட்டது மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பதை பார்வையிட்டும் மண்புழு உரம் மற்றும் கலவை உரங்களை அப்பகுதி விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கிட அறிவுரை வழங்கினார். மேலும் மக்காத கழிவுகளை தரம் பிரித்து பொருட்கள் வாரியாக ஸ்டோர் அமைத்கவும், காய்கறி தோட்டம் வளர்க்க அறிவுரை வழங்கப்பட்டது இந்த ஆய்வில் பேரூராட்சித் தலைவர் ஜெயராமன் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமுருகன் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்



கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கவரப்பட்டு கிராமத்தை சேர்ந்த செல்வி என்பவர் இடிமின்னல் தாக்கி உயிரிழந்தமைக்காக அவரது குடும்ப வாரிசுதாரர்களுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியின் மூலம் ரூ.4 லட்சத்திற்கான காசோலையை மாவட்ட கலெக்டர் ஆதித்யா செந்தில்குமார் சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கினார். உடன் சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி உள்ளார்.

# திருமயம் ஒன்றியத்தில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு புத்தாடை

புதுக்கோட்டை, அக். 21

திருமயம் ஒன்றியத்தில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு புத்தாடை மருத்துவர்கள் ராமன், ராஜசேகர பாண்டியன், சுஜிதா மற்றும் ஆசிரியர் .வசந்தமலர் சார்பாக வழங்கப்பட்டது



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஒன்றியத்தில் பள்ளி ஆயத்த பயிற்சி மையத்தில் பயிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு ஆர் எஸ் பி கிளினிக் மருத்துவர் ராமன், மருத்துவர் ராஜசேகர பாண்டியன், மருத்துவர் சுஜிதா மற்றும் கா .பள்ளிவாசல் பட்டதாரி ஆசிரியர் .வசந்தமலர் ஆகியோர் சார்பாக ரூபாய் 20 ஆயிரம் மதிப்புள்ள புத்தாடைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார கல்வி அலுவலர்கள் மகேஸ்வரன் ,ஜேம்ஸ் ஆரோக்கிய சாமி ,வட்டார வள மைய மேற்பார்வையாளர் குல்ஜார்பானு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பரிசுத்தம் சிறப்பாசிரியர்கள் ஆசிரியர் பயிற்றுநர்கள் இயன் முறை மருத்துவர் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்விற்கான ஏற்பாடுகளை வட்டார ஒருங்கிணைப்பாளர் . விஜயசாந்தி செய்தார்.

# ஆர்.ஜே பாலாஜியின் சொர்கவாசல் படத்தின் டீசர் அப்டேட்




நானும் ரவுடிதான், எல்.கே.ஜி, மூக்குத்தி அம்மன், ரன் பேபி ரன், புகழ், ஜில் ஜங் ஜக், தேவி, சலூன் போன்ற படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் நடிகர் ஆர். ஜே.பாலாஜி. ரேடியோ ஜாக்கியாக வாழ்க்கையை தொடங்கிய இவர் தற்போது படங்களில் நடிப்பதோடு கிரிக்கெட் போட்டிகளில் தனக்கே உரித்தான பாணியில் வர்ணனையாளராக இருந்து ரசிகர்களை வியப்பூட்டி வருகிறார்.

நயன்தாரா நடிப்பில் வெளிவந்த 'மூக்குத்தி அம்மன்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். அவரே இயக்கி நடித்த சிங்கப்பூர் சலூன் படம் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது நடிகர் சூர்யாவின் 45வது படத்தை இயக்குகிறார்.

சொர்கவாசல் எனும் புதிய படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் நேற்று வெளியானது. இயக்குநர் பா. ரஞ்சித் இந்தப் படத்தின் போஸ்டரை வெளியிட்டார். பா. ரஞ்சித்தின் உதவி இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். ஸ்வீப் ரைட் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் கதையை இயக்குநர் உடன் தமிழ்ப் பிரபா, அஸ்வின் ரவிச்சந்திரன் இணைந்து எழுதியுள்ளார்கள்.

'சொர்கவாசல்' படத்தின் டீசரை நாளை மாலை 6 மணிக்கு இசையமைப்பாளர் அனிருத் வெளியிட உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# நியூசிலாந்துக்கு எதிரான தோல்வி; டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் இந்தியாவின் தற்போதைய நிலை என்ன..?




நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பெங்களூருவில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இந்த தொடர் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் ஆகும். இந்நிலையில், இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்ற பின் புதிய உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் நியூசிலாந்துக்கு எதிராக தோல்வி கண்ட இந்திய அணி(68.06சதவீதம்)முதல்இடத்தில்நீடிக்கிறது.ஆஸ்திரேலியா (62.50 சதவீதம்) 2ம் இடத்திலும், இலங்கை (55.56 சதவீதம்) 3ம் இடத்திலும் உள்ளன. இந்தியாவுக்கு எதிராக வெற்றி பெற்ற நியூசிலாந்து (44.44 சதவீதம்) 6வது இடத்தில் இருந்து 4வது இடத்திற்கு வந்துள்ளது. இதைத்தொடர்ந்து இங்கிலாந்து (43.06 சதவீதம்) 5வது இடத்திலும், தென் ஆப்பிரிக்கா (38.89 சதவீதம்) 6வது இடத்திலும் உள்ளன. இதையடுத்து 7 முதல் 9 இடங்களில் முறையே வங்காளதேசம் (34.38 சதவீதம்), பாகிஸ்தான் (25.93 சதவீதம்), வெஸ்ட் இண்டீஸ் (18.52 சதவீதம்) அணிகள் உள்ளன.

# சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வரும் நடிகர் லிவிங்ஸ்டனின் மகள்



நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் கலக்கி வருபவர்நடிகர்லிவிங்ஸ்டன்.இவரதுமகள்ஜோவிதா,சின்னத்திரையில் 'அருவி', 'மவுனம் பேசியதே' போன்ற தொடர்களில் கதாநாயகியாக நடித்து மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். தற்போது வெள்ளித்திரையிலும்ஜோவிதாஅறிமுகமாகவுள்ளார்.இந்தபடத்திற்கு லிவிங்ஸ்டன் கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். இயக்குனர் உள்ளிட்ட விவரங்கள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது. இதுகுறித்து லிவிங்ஸ்டன் கூறும்போது, ''நாடகங்களே சினிமாவுக்கு முன்னோடி. அதனால் தான் எனது மகளையும் சின்னத்திரை நாடகங்களில் நடித்து அனுபவம் பெற செய்தேன். இப்போது அவர் தேறிவிட்டதால், சினிமாவில் களமிறக்குகிறேன். இந்தபடத்திற்கானகதையை 3 ஆண்டுகளாக எழுதி முடித்துள்ளேன். இதுதமிழ்சினிமாவில்இதுவரையாரும்பார்த்திடாத வித்தியாசமான கதையாக இருக்கும். 'சுந்தர புருஷன்', 'அறுவடை நாள்', 'காக்கிச்சட்டை' வரிசையில், நான் எழுதியுள்ள இந்த கதையும் நிச்சயம் வெற்றிபெறும்'', என்றார். மேலும் இது குறித்து ஜோவிதா கூறுகையில், ''என் தந்தையை போல நானும் சினிமாவில் நல்ல இடம் பிடிப்பேன். ரசிகர்களின் ஆதரவை வேண்டுகிறேன்'' என்றார்.

# ஜிம்மில் உடற்பயிற்சி செய்தபோது நடிகை ரகுல் பிரீத் சிங் காயம்

தென் இந்திய படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தவர் ரகுல் பிரீத் சிங். இவர் தமிழில் தடையற தாக்க, என்னமோ ஏதோ, ஸ்பைடர், தீரன் அதிகாரம் ஒன்று, இந்தியன் 2, அயலான் உட்பட பல படங்களில் நடித்துள்ளார். இப்போது அஜய் தேவ்கன் மற்றும் ஆர். மாதவனுடன் 'தே தே பியார் தே 2' என்ற இந்தி படத்தில் நடித்து வருகிறார். மேலும் இவரது நடிப்பில் "இந்தியன் 3" படம் விரைவில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நடிகை ரகுல் பிரீத் சிங், ஜிம்மில் 80 கிலோ எடையை தூக்கும் போது காயம் அடைந்துள்ளார். வழக்கமாக குனிந்து அதிகமான எடையைத் தூக்கும்போது இடுப்பு பெல்ட் அணிவது வழக்கம். ஆனால், ரகுல் பிரீத் சிங், பெல்ட் அணியாமல் கடந்த சில நாட்களுக்கு முன் அந்த எடையைத் தூக்கியுள்ளார். இதனால் அவர் முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர் சிகிச்சைப் பெற்று வருகிறார். இதுகுறித்து நடிகை ரகுல் பிரீத் சிங் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில் பேசிய அவர், "நான் செய்த முட்டாள் தனமான தவறு இது, உடற்பயிற்சியில்என்னைநானேஇன்னும்முன்னேற்றிக்கொள்ளசெய்தசெயல்இன்றுஎனக்குபயங்கரமானபின்விளைவை ஏற்படுத்தியுள்ளது . கடந்த 6 நாட்களாக நான் படுக்கையில் தான் இருக்கிறேன், முழுவதுமாக நான் குணமடைய ஒரு வாரம் அல்லது அதற்கு மேல் ஆகும், ஆனால் அதிவிரைவில் நான் குணமடைய வேண்டும் ஒரே இடத்தில் தன்னம்பிக்கை இழந்து ஓய்வெடுப்பது எனக்கு எளிதான விஷயம் அல்ல. ஆனால் இதன் மூலம் எனது வாழ்க்கையில் முக்கியமான பாடம் ஒன்றை கற்றுக்கொண்டேன்' என்று கூறினார். நடிகர் ஜாக்கி பாக்னானியை நீண்ட நாட்களாக காதலித்து வந்த நிலையில் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்துக்குப் பிறகு இருவரும் இணைந்து ஒர்க் அவுட் செய்யும் வீடியோ புகைப்படங்களை அவ்வப்போது சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந்தனர்.

# நியூசிலாந்துக்கு எதிரான தோல்விக்கு காரணம் என்ன ? ரோகித் சர்மா விளக்கம்




இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்டடெஸ்ட், தொடரில் ஆடி வருகிறது. இதன்படி இந்தியா நியூசிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி பெங்களூருவில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்தது. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் டாஸ் கூட போடப்படாமல் கைவிடப்பட்டது. 2வது நாள் ஆட்டம் நடைபெற்றது. அதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்தது.முதலில் பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 402 ரன்கள் குவித்தது. நியூசிலாந்து தரப்பில் ரச்சின் ரவீந்திரா 134 ரன், கான்வே 91 ரன், டிம் சவுதி 65 ரன் எடுத்தனர். இதையடுத்து 366 ரன்கள் பின்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 462 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதில் அபாரமாக ஆடிய சர்பராஸ் கான் 150 ரன்னிலும், ரிஷப் பண்ட் 99 ரன்னிலும் அவுட் ஆகினர்.

இதன் காரணமாக 107 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. ஜஸ்ப்ரீத் பும்ரா 4 பந்துகள் வீசிய நிலையில்,

போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்று 4ம் நாள் ஆட்டம் முடிக்கப்பட்டது. 5வது நாள் ஆட்டம் இன்று நடைபெற்றது .மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தொடங்கியது . தொடக்கத்தில் டாம் லாதம் ரன் எதுவும் எடுக்காமல் பும்ரா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் டெவான் கான்வே 17 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து வில் ய்ங் , ரச்சின் ரவீந்திரா இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர் . இதனால் நியூசிலாந்து அணி 27.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது .

இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 10 என நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. 2வது டெஸ்ட் வரும் 26ம் தேதி தொடங்க உள்ளது. இந்த நிலையில் தோல்வி குறித்து பேசிய இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா கூறியதாவது, முதல் இன்னிங்சில் நாங்கள் சரியாக பேட்டிங் செய்யவில்லை. நாங்கள் 46 ரன்களுக்கு ஆல் அவுட் ஆவோம் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் இரண்டாவது இன்னிங்ஸில் பேட்டிங்கில் சிறப்பாக செயல்பட்டோம் இது ஒரு நல்ல முயற்சி. 350 ரன்கள் பின்தங்கியிருக்கும் போது,அதிகம் யோசிக்க முடியாது. ரிஷப் பண்ட் மற்றும் சர்பராஸ் கான் ஆகியோரின் பேட்டிங்கை பார்க்க மிகவும் உற்சாகமாக இருந்தது.

நியூசிலாந்து அணி நன்றாகப் பந்துவீசியது, அதற்கு நாங்கள் பதிலளிக்கத் தவறிவிட்டோம். நாங்கள் மீண்டு வருவோம் . என தெரிவித்தார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.